## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மூன்றாம்நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரித்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

எனது அறிக்கையின் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, ஆணைக்குழுவின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் பந்தி 1.5 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு தரநியமங்களின் (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

## 1.3. நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து ஆணைக்குழுவின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது அதிகார சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி ஆணைக்குழு செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

---------------------

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

------------------------------------------------------------------------------

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல்

என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும். பொது பேரேடு , நாளேடு, நாளேடு வவுச்சர், கொடுப்பனவு வவுச்சர் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லுதல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வரும் தலைப்புகளின்கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.5.2 இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஒழுங்கமையாமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| உரிய தரநியமத்தின் தொடர்புகளுடன் ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ)இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமம் 01 இல் 48 ஆவது பந்தி பிரகாரம், இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கள்மூலம் தேவைப்படுத்தப்படும் அல்லது அனுமதி வழங்கியுள்ளவிடத்து தவிர்ந்த வருமானம் மற்றும் செலவினம் பதிலீடு செய்தலாகாதெனவும், மீளாய்விற்கான ஆண்டில் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக கிடைக்கப்பெற்றிருந்த ரூபா. 456,000 ஆன பணத்தொகை வருமானமாக கணக்கு வைப்பதற்குப் பதிலாக அந்த கருத்திட்ட செலவில் பதிலீடு செய்யப்பட்டிருந்தது. | வருமானம் மற்றும் செலவினம் என்பவற்றை ஒன்றுக்கொன்று பதிலிடு செய்யாது வெவ்வேறாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளேன். | இலங்கை பொது துறை கணக்கீட்டு தரநியம்ங்களின்படி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ)இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தரநியமம் 07 இல் 47 ஆவது பந்தி பிரகாரம் சொத்துக்கள், பொறிகள் மற்றும் இயந்திரங்கள் என்பவற்றின் நியாயமான பெறுமதி வேறுபடுதலின் மீது மீள்கணிப்பீடு செய்தல் வேண்டுமாயினும், நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருந்த தேறிய பெறுமதி ரூபா. 27,087,974 ஆன சொத்துக்கள் தொடர்பில் 2008 ஆம் ஆண்டின் பின்னர் மீள்கணிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தரநியமம் 07 இல் 47 ஆவது பந்தி பிரகாரம் சொத்துக்கள், பொறிகள் மற்றும் இயந்திரங்கள் என்பவற்றின் பெறுமதி வேறுபடுதலின் மீது, இவ்வாண்டில் நிலையான சொத்துக்களை மீள்கணிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றேன். | தொடர்புடைய தரநியமத்தின்படி நடைமுறையல்லாத சொத்துக்களை மீள்கணிப்பீடு செய்தல் வேண்டும். |
| (இ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தர நியமங்கள் 07 இல் 65 ஆவது பந்தி பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களில் பயனுள்ள ஆயட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யாமை காரணமாக செலவு ரூபா.70,494,799 ஆன சொத்துக்களை அடையாளம் | இதன்போது நிறுவனத்தின் தேய்மானம் பொருட்டு இருப்பு குறைந்து செல்லும் முறை பயன்படுத்தப்படுவதால், ஏதேனும் சொத்தொன்று நீண்டகாலத்திற்கு தேய்மானமடைகின்றது. அதன்படி முற்றுமுழுதாக தேய்மானம் முடிவுறுத்திய சொத்துக்கள் | தேய்மான கொள்கைபடி சம்பந்தப்பட்ட சொத்துக்களின் பயனுள்ள ஆயுட் காலம் முடிவடைந்துள்ளதால் மீண்டும் பயனுள்ள ஆயட்காலம் மீளாய்வு |

| | | |
|---|---|---|
| காணப்பட்டுள்ளதுடன், அவற்றின் பயனுள்ள ஆயட்காலம் முடிவடைந்திருப்பினும், மேலும் குறித்த சொத்துக்களை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி மதிப்பிடப்பட்ட குறைப்பாடு இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தரநியமம் 03 இன்படி மீள்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | இல்லையென குறிப்பிடுகின்றேன். | செய்தல் வேண்டும் |
| (ஈ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்கள் 08 இல் 34 ஆவது பந்தி பிரகாரம் வாகன விபத்து தொடர்பில் வெளியக தரப்பால் ரூபா.1,200,000 ஆன நட்டஈடு கோரி வழக்கு கோவையிடப்பட்டிருப்பினும், அது தொடர்பாக நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | இதனை எதிர்பாராத பொறுப்புப்பாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றேன். | உறுதியான மதிப்பீடு பெற்றுக்கொள்ள முடியாத எதிர்பாராத பொறுப்பாக நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தல் வேண்டும். |
| (உ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்கள் 07 இல் பந்தி 13 இல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின்கீழ் மூலதனப்படுத்த வேண்டிய மொத்தம் ரூபா. 197,097 ஆன மோட்டார் வாகனங்கள் மற்றும் கட்டிடங்களின் பேணுதல் செலவுகளாக ஆண்டில் இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. | அலுவலக வளாகத்தின் கட்டிடம் அமைச்சிற்கு உரியதாவதால் கட்டிடங்களின் பொருட்டு மேற்கொள்கின்ற சீரமைப்புகள் கட்டிடங்களின் சீரமைப்பு செலவினங்களின்கீழ் மூலதன செலவினமாக கணக்கு வைக்கப்படுகின்றது. கணக்காய்வில் சுட்டிக்காட்டியுள்ளவாறு வாகனங்களுக்கான உதிரிபாகங்களை பொருத்துவதன்மூலம் அதன் ஆயுட்காலம் அதிகரிப்பதற்கு ஏற்புடையதாயின் வாகன கணக்கின்கீழ் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றேன். | அரச துறை கணக்கீட்டு தரநியமங்களின் படி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமத்துவத்தின் அபிப்பிராயம் சுருக்கமாக | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக மொத்தம் ரூபா. 2,783,258 ஆன செலுத்தப்பட வேண்டிய பல்வேறு செலவினம், அச்சீட்டு செலவினம், துறைசார் செலவினம் மற்றும் ரூபா.40,727 ஆன கிடைக்கப்பெற வேண்டிய சான்றிதழ் வருமானம் கணக்குகளில் இருந்து தவறவிடப்பட்டிருந்தது. | கணக்காய்வில் சுட்டிக் காட்டியுள்ளவாறு பரிசோதனை செய்து பார்த்து முன்னரான ஆண்டின் சீராக்கல் கணக்கின்கீழ் 2020 ஆண்டுக்கு ஏற்புடையதாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றேன். | நிதிக் கூற்றுகளை தயாரிக்கையில் ஆண்டுக்கு ஏற்புடையதான எல்லா வருமானம் மற்றும் செலவினம் கணக்கு வைத்தல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| (ஆ) 2018 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக மீளாய்விற்கான ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த மொத்தம் ரூபா. 2,501,102 ஆன மதிப்பீட்டு கட்டணங்கள், சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவுகள் அந்த ஆண்டின் இலாபத்தில் சீராக்குவதற்குப் பதிலாக மீளாய்விற்கான ஆண்டில் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | முன்னரான ஆண்டின் சீராக்கல் கணக்கில் மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றேன். | நிதிக் கூற்றுகளை தயாரிக்கையில் ஆண்டுக்கு ஏற்புடையதான எல்லா வருமானம் மற்றும் செலவினம் கணக்கு வைத்தல் வேண்டும் |
| (இ) 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்தில் வங்கி கணக்கிணக்க கூற்றுபடி ரூபா. 1,463,907 தொகை ஆண்டில் நேரடியான வரவுகளும் ரூபா. 1,002,905 ஆன நிலையான கட்டளைகள்மீது கொடுப்பனவுகள் உள்ளிட்ட நேரடியான பற்றுகளும் அடையாளம் காணப்பட்டு கணக்கு வைக்காமை காரணமாக ஆண்டின் வருமானம் மற்றும் செலவினம் குறித்த அளவுகளில் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டுக்கான கணக்கு கூற்றுகளை தயாரித்து முடிவுறுத்தியிருந்தமையால் அவ்வாறு கணக்கு வைக்கப்படாத நேரடி பற்றுகள் மற்றும் வரவுகள் 2020 ஆம் ஆண்டில் சீராக்கப்பட்டுள்ளது. | வங்கியால் மேற்-கொள்கின்ற நேரடி-யான வரவு மற்றும் பற்று என்பன அடையாளம் காண-ப்பட்டு ஆண்டுக்கு ஏற்புடையதான நிதி கூற்றுகளில் சீராக்கு-வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) வங்கி கணக்கிணக்க கூற்றுகளில் உள்ள கொடுப்பனவுகளின் பொருட்டு சமர்ப்பிக்கப்படாத காலம்கடந்த ரூபா. 323,028 பெறுமதியிலான காசோலைகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதி 396 பிரகாரம் கடன்கொடுநர்களை உருவாக்கும்போது கடன்கொடுநர்களின் கணக்கு வரவு வைப்பதற்கு பதிலாக தவறுதலாக கடன்கொடுநர்களின் கணக்கில் பற்று வைத்தமையால் ரூபா.646,056 ஐ குறைவாக காட்டப்பட்டிருந்தது. | கணக்கீட்டு கணினி மென்பொருளில் பிரச்சினை காரணமாக 2019.01.01 ஆக குறிப்பிடப்பட்டிருப்பினும், உண்மையாக அப் பிழையை 2019.09.03 ஆந் திகதிக்கு பின்னர் செவ்வையாக்கப்பட்டுள்ளது. | எதிர்வருங் காலத்தில் உள்ளக நிருவாக முறைமை வலுப்படுத்தி தாமதமின்றி வங்கி கணக்கிணக்க கூற்று தயாரித்தல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

| விடயம் | தொகை ரூபா. | வழங்கப்படாத கணக்காய்வு சான்றிதழ்கள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் சுருக்கமாக | பரிந்துரை |
|---|---|---|---|---|
| முற்பணங்களின் மீதி | 1,879,170 | விபரமான அட்டவணை | முற்பணக் கணக்கில் உள்ள ரூபா.1,879,170.00 ஆன முற்பணப் பெறுமதிக்கு ஏற்புடையதான அட்டவணை கணக்காய்விடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றேன். | நிதிக் கூற்றுகளில் காண்-பிக்கப்படும் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான அட்டவணைகள் மற்றும் ஏனைய சாட்சிகள் சமர்ப்பித்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை

பின்வரும் ஒழுங்கமையாமை விடயங்கள் அவதானிக்கப்பபட்டன.

| சட்டங்கள, விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் தொடர் | ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ)இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிக் கோவை | | | |
| i. நிதி ஒழுங்குவிதிகள் 103 (1), 104 (3) மற்றும் 104 (4) பிரிவுகள் | ஆணைக்குழுவிற்குரிய வாகனமொன்றில் 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25 ஆந் திகதி ஏற்பட்ட விபத்து தொடர்பில் நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | உள்ளக பரிசோதனை சபையின் புலனாய்வு அறிக்கைபடி செலவிடப்பட்ட மொத்த தொகை சம்பந்தப்பட்ட சாரதியிட-மிருந்து அறவிடுவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதால் முழுமொத்த செலவினம் தவணையாக அவரது சம்பளத்திலிருந்து அறவிடப்படுகின்றது. | தொடர்புடன்கூடிய ஒழுங்குவிதி பிரகாரம் பூரண அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும். |
| ii. நிதி ஒழுங்குவிதிகள் 395 (இ) | ஒவ்வொரு வங்கி கணக்கு பொருட்டும் ஒவ்வொரு மாத இறுதியிலும் இருந்த நிலைமை தொடர்பாக, அடுத்த மாதம் 15 அந் திகதிக்கு முன்னர் வங்கி கணக்கிணக்க கூற்று தயாரிக்கப்பட வேண்டுமா-யினும், ஆணைக்குழுவின் பிரதான நடைமுறை கணக்கிற்கு ஏற்புடையதாக 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் தொடக்கம் 2020 பெப்ருவரி மாதம் வரையிலான வங்கி கணக்கிணக்க கூற்றுகள் 2020 யூன் 15 ஆந் திகதியிலும் தயாரித்து கணக்காய்விடம் சமர்ப்பிக்கவில்லை. | நிதி ஒழுங்குவிதிகள் 395 (இ) பிரகாரம் வங்கி கணக்கிணக்க அறிக்கை கணக்காய்வுப் பிரிவிடம் ஒப்படைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | வலுவான உள்ள நிருவாகத்தை ஏற்படுத்தி உரியவாறு வங்கி கணக்கிணக்க கூற்று தயாரித்தல் |
| iii. நிதி ஒழுங்குவிதிகள 188 (2) | வங்கியில் வைப்புச் செய்த போதிலும், பணமாக்-கப்படாது 06 மாதங்கள் தொடக்கம் 24 மாதங்கள் | வங்கி கணக்கிணக்க கூற்று தயாரிக்கும் தாமதம் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதுடன், 2017 | உரிய திகதியில் வங்கி கணக்-கிணக்க கூற்று தயாரித்து |

| | | | |
|---|---|---|---|
| | சென்றுள்ள மொத்தம் ரூபா. 3,209,720 ஆன காசோலைகள் 309 தொடர்பில் நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மெற்கொண்டிருக்கவில்லை. | மற்றும் 2018 ஆண்டுக்கு ஏற்புடையதான பணமாக்கப்படாத பண வைப்புகள் தொடர்பாக பரிசோதனை செய்து அவற்றுக்கு ஏற்புடையதான சீராக்கல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | தேவையான சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| iv. நிதி ஒழுங்குவிதிகள் 396 | வழங்கப்பட்டிருப்பினும் செல்லுபடியான காலம் முடிவடைந்துள்ள மொத்தம் ரூபா. 6,497,642 ஆன 517 காசோலைகள் தொடர்பில் தொடர்புடய ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | வங்கி கணக்கிணக்க கூற்றுகள் தயாரிப்பதன் தாமதம் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதுடன், செல்லுபடியான காலம் முடிவடைந்த காசோலைகள் தொடர்பில் ஏற்புடைய சீராக்கல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய திகதிக்கு வங்கி கணக்கிணக்க கூற்று தயாரித்து தேவையான சீராக்குதல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| v. நிதி ஒழுங்குவிதிகள் 371 (2) (ஈ) பந்தி மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 3/ 2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | i. நிமித்த கட்டுநிதி வழங்குதல் பதவிநிலை அலுவலரிடம் மட்டும் மேற்கொள்ளுதல் வேண்டுமாயினும், ஆணைக்குழுவால் அதற்கு முரணாக 110 சந்தர்ப்பங்களில் பதவிநிலை அலுவலர் அல்லாத 28 அலுவலர்களிடம் மொத்தம் ரூபா.3,097,597 ஆன நிமித்த கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | கடந்த ஆண்டின் கணக்காய்வு அறிக்கை மற்றும் அந்த ஆலோசனைகள் பிரகாரம் 2019.07.03 ஆந் திகதி தொடக்கம் நிதி ஒழுங்குவிதி 371 (2) மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கை பிரகாரம் கட்டயாம் பணியாற்றப்பட்டுள்ளது. | தொடர்புடைய ஒழுங்குவிதிபடி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| | ii.ஏதேனும் விசேட பணிக்காக பதவிநிலை அலுவலரிடம் ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா.100,000 ஆன உச்சவெல்லை வரை மட்டும் நிமித்த கட்டுநிதி வழங்க முடியுமாயினும், அதற்கு முரணாக திறைசேரி அனுமதியின்றி 45 சந்தர்ப்பங்களில் 30 அலுவலர்களிடம் ரூபா. 102,000 தொடக்கம் ரூபா. 3,894,302 வரையிலான எல்லைக்குள் நிமித்த கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | மீளாய்விற்கான ஆண்டில் பரீட்சை நடவடிக்கைகளின் பொருட்டு பெற்றுக்கொண்டுள்ள எல்லைகள் மீறிய முற்பணம் பொருட்டு திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொண்ட வாய்மொழிமூலமான ஆலோசனைகள்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்பதை குறிப்பிடுகின்றேன். | தொடர்புடைய ஒழுங்குவிதிபடி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| iii.நிமித்த கட்டுநிதியாக பெற்றுக்கொண்டுள்ள பணத்தொகை உரிய அலுவல் முடிவடைந்த-வுடன், தீர்க்கப்படுதல் வேண்டுமாயினும், முற்-பணம் பெற்றுக்கொண்டு ஓராண்டுக்கு அதிகமான காலம் சென்றிருப்பினும், 2020 யூன் 30 ஆந் திகதி வரை தீர்க்கப்-படாதிருந்த ரூபா.2,760,082 தொகையிலான பற்று மீதி மற்றும் ரூபா. 593,236 ஆன வரவு முற்பண மீதி காணப்பட்டது. | இந்த கட்டுநிதி உரியவாறு அலுவல் முடிவடைந்தவுடன் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றுநிருபம் பிரகாரம் உரியவாறு முற்பணம் சீராக்குதல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா. 14,567,897 ஆன மிகை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் மிகை ரூபா. 29,585,644 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா. 15,017,747 ஆன வீழ்ச்சியடைதல் அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சியடைதலுக்கு தொழில்பாட்டு செலவினத்தின் அதிகரிப்பு மற்றும் கருத்திட்டங்களின் நிதி உதவி குறைவடைதல் பிரதான காரணமாகியுள்ளது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்குகளில் பகுப்பாய்வு

முழுமொத்த வருமானம் வீழ்ச்சியடைதலுக்கு மீளாய்விற்கான ஆண்டில் கருத்திட்டங்களின் நிதி உதவி கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 25.8% ஆல் குறைவடைதல் காரணமாகியிருந்ததுடன், ஆளுக்குரிய வேதனாதிகள் 6.3% ம், பிரயாணச் செலவு 60% ம், தொழில்பாட்டு செலவினம் 19.6 % ம் என்ற வகையில் அதிகரித்தலானது முழுமொத்த செலவினம் அதிகரிப்பதற்கு காரணமாக அமைந்திருந்தது.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

மூன்றாம்நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவின் 2018 ஆம் ஆண்டில் 5.74 ஆக இருந்த நடைமுறை சொத்துக்கள் விகிதாசாரம் 2019 ஆம் ஆண்டில் 8% வரை வளர்ச்சியடைந்திருந்தது. அதாவது முன்னரான ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடைமுறை பொறுப்புகளை தீர்ப்பதற்காக நிலவும் நடைமுறை சொத்துக்களின் அளவு 2.26% ஆல் வளர்ச்சியடைந்திருந்தது.

மேலும் உடனடி சொத்துக்கள் விகிதாசாரம் கவனத்தில் கொள்கையில் 2018 ஆம் ஆண்டில் 5.48 ஆக நிலவிய இந்த விகிதாசாரம் 2019 ஆம் ஆண்டில் 7.7% வரை வளர்ச்சியடைந்திருந்தது.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவின் இறுதி மதிப்பீட்டு செயற்பாடு (Procedure) படி மதிப்பீட்டாளர்களால் இறுதி மதிப்பீடு மேற்கொள்கின்ற திகதி தொடக்கம் 2 வாரங்களுக்குள் மதிப்பீட்டு பெறுபேறுகள் மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், மதிப்பீடு நடாத்தப்பட்டு 03 மாதங்களுக்கு அதிகமான காலப்பகுதிக்கு பின்னர், குறித்த பெறுபேறுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டதாக இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகார சபை பரிசோதனைகள் மற்றும் மதிப்பீட்டு பிரிவால் வழங்கிய தகவல்கள்படி அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை | மதிப்பீட்டு செய்றபாடு மற்றும் பெறுபேறுகள் வழங்குதல், சான்றிதழ் வழங்குதல் விரைவாக வழங்குவதன்ஊடாக வினத்திறனுடனான சேவை வழங்குவதன்மீது கவனம் செலுத்தல் வேண்டும் |

### 3.2 தொழில்பாட்டு வினைத்திறனின்மை

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1990 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க சட்டத்தில் பிரிவு 2 இன்படி ஆணைக்குழுவால் பயிற்சி திட்டங்கள் (VET Plan) தயாரித்து சம்பந்தப்பட்ட தொழில்சார் பயிற்சி நிறுவனங்களிடம் வழங்கியிருப்பினும், அவற்றை நடை-முறைப்படுத்தல் தொடர்பாக பின்னூட்ட-ல்களை மேற்கொண்டு, நடைமுறை-ப்படுத்த வேண்டிய பரிந்துரைகளை உரிய தொழில்சார் நிறுவனங்களிடம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை | திட்டங்கள தயாரித்து சம்பந்தப்பட்ட தொழில்சார் பயிற்சி நிறுவனங்களிடம் வழங்கி அவற்றை நடைமுறைப்படுத்துவதன் மீது கவனம் செலுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) தேசிய திறன் தரநிலைகளை தயாரிப்பதற்கு மூன்றாம்நிலை தொழில்சார் கல்வி ஆணைக்குழுவின்கீழ் தாபிக்கப்பட்ட சுற்றுலா கைத்தொழில் துறைசார் திறன் சபையிடம் 2018 ஆம் ஆண்டில் துறைசார் திறன் அபிவிருத்தி கருத்திட்டம்மூலம் ரூபா. 2,034,886 ஐ செலவிடப்பட்டிருப்பினும், சமயக்காரர் மற்றும் வெதுப்பக கற்கைநெறிகளின் பொருட்டு தேசிய திறன் தரநிலைகளை இற்றைப்படுத்தியிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை | எல்லா கற்கை நெறிகளுக்கும், திறன் தரநிலைகள் மற்றும் பாடவிதானங்கள் என்பன இற்றைப்படுத்தி தற்கால-த்திற்கு பொருத்தமான வகையில் தொழில் வல்லுநர்களை உருவாக்-குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) 2018 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக 13 பயிற்சி நிலையங்களில் பேணிச் சென்ற, சுற்றுலாத் துறை ஹோட்டல் துறைக்கு ஏற்புடையதான 28 பயிற்சி கற்கை-நெறிகளில் பயிலுநர்களின் மதிப்பீடு-களை மேற்கொண்டிருக்கவில்லை என்பது கணக்காய்வு திகதியான 2019 திசெம்பர் 03 ஆந் திகதியில் மேற்கொண்ட பரிசோ-தனையின்போது அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை | உரிய காலப் பகுதியில் மதீப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |